

மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர். சிற்றம்பலம் பரமசாமி

## அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவுமலர்

22.07.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மாதகலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் சிற்றம்பலம் பரமசாமி

அவர்கள்

இறைபதம் எய்தியமை குறித்த

# நினைவுமலர்

## 22.07.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின் குலவிளக்காய்

ஒளிமிளிர்ந்து

எம்மை அன்போடும் பண்போடும்

பாசத்துடன் அரவணைத்து

நல்வழிகாட்டிய, நல்வாழ்வு வாழ

வழிகாட்டிய அன்புத்தெய்வமே

இந்நினைவு மலரினை உங்களது

பொன்பாதமதில் விழிநீர்

சொரிய சமர்ப்பணம் செய்து

வணங்குகின்றோம்.

இங்ஙனம்
உன் நினைவுகளுடன்
என்றும் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# தோத்திரப் பாடல்கள்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையே வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

மாதா பிதாவாகி மக்களாகி
மணிகடலும் மால் விசும்புந் தானே யாக்கி
கோதா விதியாய்க் குமரி யாக்கிக்
கொள் புலித் தோலாடைக் கமுகனாகிப்
கோதாய மலர்கொண்டு போற்றி நின்று
புனைவார்தம் பிறப்பறுக்கும் புனிதனாகி
யாதானு மெனு நினைத்தார்க் கெளிதே யாகி
அழல்வண்ண வண்ணர்தம் நின்ற வானே

## திருவாசகம்

யானே பொய் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதாள் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருள்வாய் அடியேன் வந்துறுமாறே.

*********************************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
ஏழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார் துணை என்றாள்
அஞ்சல் என்றருள் செய்வாக் கோயில்
கைவரும் பழனங் இழைத்த செஞ்சாலிக்
கடைகியர் கலைதரு நீலம்
செய்வரம் பரம்பும் பெரும் பற்றப் பலியூர்த்
திருவளர் திருச்சிற்றம்பலம் பலமே

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமை மண வாளனுக்கே
பாரும் விரும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

நன்மை பெருகு அறிநெறியே வந்தணைந்த நன்னூரின்
மன்னு திருத் தொண்டனார் வணங்கி மகிழ்தெழும் பொழிதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்னவர்தம்
சென்னிமிசை பாதமலர் சூட்டினான் சிவபெருமானே

*திருச்சிற்றம்பலம்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது அன்பு தாத்தாவின் வாழ்க்கை பதிவுகள்

ஈழநாட்டில் அரசடி சித்தி விநாயகர் மத்தியில் மங்களகரமாக வீற்றிருந்து அருள் பாலிக்க, பானாவெட்டி புவனேஸ்வரி அம்மன் எல்லையில் இருந்து தொல்லைகள் நீக்கி காவல் புரிய, அல்லல் போக்குபவனாக முருகப் பெருமான் யாமிருக்க பயமேன் என்று நுணசை பதியிலே அழகு பொங்க அமர்ந்திருக்கின்ற பெருமை நிறைந்த மாதகல் பதியிலே 1948.10.16 அன்று சிற்றம்பலம் சின்னத்தங்கம் தம்பதிகளின் 4வது புத்திரனாக அவதரித்து பரமசாமி என்று நாமம் கொண்டார்.

மாதகலில் பிறந்த பரமசாமி சிறிது காலத்தில் மாங்குள மண்ணிலே தனது கல்வி பயணத்தினை தொடர்ந்தார். சிறு வயதிலேயே கல்வியில் ஆர்வமுடையவராக இருந்தபோதும் குடும்ப சூழல் காரணமாக கல்வியை இடை நிறுத்தி குடும்ப நலனுக்காக உழைக்க வேண்டிய நிர்ப்பந்ததிற்கு உள்ளாகி குடும்ப நன்மை கருதி உழைத்தார்.

சிவபாக்கியம், கந்தசாமி, அன்னலட்சுமி, இராசமணி, செல்வராசா ஆகியோரின் சகோதரராக இருந்து அவர்களின் பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரியவராக திகழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் வாகன சாரதியாகவே தொழில் புரிந்தார். அதன் காரணமாக இவர் இலங்கையின் பல பிரதேசங்களிற்கும் சென்று இருந்தமையின் காரணமாக சிங்கள மொழி பேசுவதில் ஓரளவு தேர்ச்சியும் பெற்றிருந்தார்.

பின்னர் மாதகலை சேர்ந்த இராசலிங்கம் சிவகாமி தம்பதியரின் புத்திரியான திலகவதி என்பவரை திருமணம் புரிந்து அவர் மீது அன்பும் அக்கறையும் கொண்ட கணவராக இல்லற வாழ்க்கையை தொடர்ந்து, சிறுது காலத்தில் வெளிநாடு செல்ல முடிவெடுத்து ஆசிய நாடுகளில் ஒன்றான சவூதி அரேபியா சென்று 7 வருடங்கள் அயராது உழைத்து நாடு திரும்பி தனது குடும்பத்திற்கும் உறவினர்களுக்கும் வேண்டிய உதவிகள் செய்து கொடுத்து மகிழ்வுடன் வாழ்ந்து வந்த போதும் குழந்தை செல்வம் இல்லை என்ற குறை இருந்தே வந்தது.

இந்த காலகட்டத்தில் இவர் மனைவி மனநிலை பாதிக்கப்பட்டு துயரம் கொண்டு இவர்தம் மனைவி மீது அதீத அன்பும் அக்கறையும் கொண்டு வைத்திய ஆலோசனைகளுடன் எதுவித குறையும் இன்றி கவனித்து வந்தார். இன் நிலையில் தனது மருமகனான இராசேந்திரம் திலகராணி என்போரின் 3 வயது குழந்தை கிரிஷாவை தன்னுடன் வைத்து வளர்க்க ஆரம்பித்து தனது குழந்தை செல்வம் இல்லை என்ற குறையை போக்கினார். பின்னர் சிறிது காலத்தின் பின் இராசேந்திரத்தின் இன்னொரு மகள் பிருந்தாவையும் தன்னுடன் வைத்து கல்வி கற்பிக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்தார். இரு பேரப்பிள்ளைகளையும் தனது சொந்த பிள்ளைகளாக நினைத்து வளர்த்தார்.

தனது சகோதரர்களின் பிள்ளைகளையும் தன் பிள்ளைகளாக எண்ணியதோடு அவர்களின் இன்ப துன்ப காரியங்களை தான் முன்னின்று நடாத்தி அவர்களின் அன்பையும் பெற்றார். மேலும் தனது சகோதரியான அன்னலட்சுமியின் மகனான கனகலிங்கம் என்பவரை தனது சொந்த மகனாக எண்ணி தானே முன்னின்று திருமணம் செய்து வைத்தார். இவ்வாறு தனது உறவினர்களுக்கு நிழல் வேண்டும் போது மரமாகவும் இருள் வந்த போது ஒளியாகவும் இருந்து அவர்களின் மதிப்பை பெற்றார்.

மீண்டும் 2003ம் ஆண்டு மாதகல் கிழக்கிலே குடியேறி தனது பேரப்பிள்ளைகளுடனும் மனைவியுடனும் இன்புற வாழ்ந்த காலத்தின் மனைவியின் சகோதரனான குணரத்தினத்தையும் தன் ஆதரவில் வைத்துப் பார்த்தார். சிறிது காலத்தின் பின் அவரின் மனைவி மார்பக புற்று நோயால் பாதிக்கப்பட்டார். அவரின் வைத்திய சிகிச்சைகளுக்காக பலகாலம் கஷ்டப்பட்ட போதும் தனது பேரப்பிள்ளைகளின் கல்வி மீதும் மிகுந்த அக்கறை கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த வேளையில் இவரும் குருதி அமுக்கம் முட்டு போன்ற நோய்களின் தாக்கத்தை எதிர்கொண்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்த கால கட்டத்தில் பேரப்பிள்ளைகளின் கல்விக்காகவும் தனது மனைவியை பராமரிப்பதற்காகவும் பெரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரமப்பட்டே வாழ்ந்து வந்தார். அவரின் சிரமம் வீண் போகாது அவரின் பிள்ளைகள் கல்வியில் தேர்ச்சி பெற்று நல்ல நிலையை அடைந்தனர்.

இந்த வேளையில் தனது மூத்த பிள்ளையின் திருமணத்தினை நடாத்தி பார்க்க ஆசை கொண்டு அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்ட வேளையில் அவரது அன்பு மனைவியின் நோயின் கடுமை காரணமாக படுத்த படுக்கையாகி மரணத்தின் விளிம்பில் நின்றிருந்த வேளையிலும் திருமணத்தை எதுவித குறையும் இன்றி நடாத்தி வைத்து ஆனந்தம் அடைந்தார்.

பின்னர் குறுகிய காலத்தில் அவரது ஆருயிர் மனைவி இறைவனடி சேர பெரும் துயர் கொண்ட போதும் தனது உறவினர்களின் அன்பிலும் ஆதரவிலும் வாழ்ந்தார். மேலும் தனது ஆதரவிலிருந்த மனைவியின் சகோதரன் குணரத்தினத்தை அவரின் குடும்பத்தினருடன் சேர்த்து வைத்ததோடு தான் வளர்த்த பிள்ளைகளின் பெற்றோர்களை தனக்கு துணையாக வைத்து தன்னை சார்ந்தவர்களுக்கு தனது கடமைகளை செய்து முடித்த மனத்திருப்தியுடனும் தனது பேரப்பிள்ளை கிரிஷாவை எதுவித குறையும் இன்றி வளமாக வாழ்வாள் என்ற பூரண நம்பிக்கையோடும் நிம்மதியாக வாழ்ந்து வந்தார்.

இவரை அவரது பேரப்பிள்ளைகள் மட்டுமன்றி உறவினர்கள், ஊரவர்கள், அயலவர்கள் அனைவரும் "தாத்தா" என்றே அன்புடனும் மதிப்புடனும் அழைத்து வந்தமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கது. இன்நிலையில் அவரது தமக்கையாரின் மரணச் சடங்கிற்காக மாங்குளம் சென்று அங்கிருந்த வேளையில் 22.06.2015 அன்று இறைவனின் அழைப்பை ஏற்று சொக்கத்தினை சென்றடைந்தார். "தாத்தாவின்" இழப்பு இவரை சார்ந்தவர்களுக்கு பேரிழப்பாக இருந்த போதும் இவரின் இறப்பு மகிமை மிக்கது. இவர் வாழ்வில் செய்த புண்ணிய கருமங்களின் காரணமாகவும் மனைவி மீது கொண்ட அதீத அன்பு காரணமாகவும் மனைவி மறைந்த குறகிய நாட்களிலே எதுவித துன்பங்களையும் அனுபவிக்காது சொர்க்கத்தை சென்று அடைந்தார்.

„தெய்வமாக வாழ்ந்து தெய்வமாகிவிட்ட அன்பு தாத்தாவின்
ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பூர நாயகியே

கற்பூர நாயகியே கனகவல்லி
காளி மகமாயி கருமாரியம்மா
பொற்கோவில் கொண்ட சிவகாமியம்மா
பூவிருந்த வல்லி தெய்வ யானையம்மா
விற்கோல வேதவல்லி விசாலாட்சி
விழிக்கோல மாமதுரை மீனாட்சி
சொற்கோவில் நானமைத்தேன் இங்கு தாயே
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே
(கற்பூர)

புவன முழுதாமுகின்ற புவனேஸ்வரி
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி
நவநவமாய் வடிவாகும் மகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி
உன்னடிமைச் சிறியேனை நீயாதரி
(கற்பூர)

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறைவிடத்தில் முறையிடுவேன் தாயே எந்தன்
அன்னையவள் நீயிருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ அம்மா
கண்ணீரைத் துடைத்து விட ஓடிவாம்மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா
சின்னவனின் குரல்கேட்டுன் முகம் திருப்பு
சிரித்தபடி என்னைத்தினம் வழி அனுப்பு
(கற்பூர)

கண்ணிரண்டும் உன்னுருவே காணவேண்டும்
காலிரண்டும் உன்னடியே நாடவேண்டும்
பண்ணமைக்கும் நாஉனையெ பாடவேண்டும்
பக்தியோடு கைஉனையே கூடவேண்டும்
எண்ணமெலாம் உன்நினைவே ஆகவேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடைய தாகவேண்டும்
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா
மகனுடைய குறைகளை நீதீருமம்மா
(கற்பூர)

நெற்றியினுள் குங்குமமே நிறையவேண்டும்
நெஞ்சினிலும் திருநாமம் வழியவேண்டும்
கற்றதெல்லாம் மேன்மேலும் பெருகவேண்டும்
கவிதையிலே உன்நாமம் வாழவேண்டும்
சுற்றமெல்லாம நீடூழி வாழவேண்டும்
ஜோதியிலே நீயிருந்து ஆள வேண்டும்
மற்றதெல்லாம் நானுனக்குச் சொல்லலாமா
மடிமீது பிள்ளைஎன்னைத் தள்ளலாமா
(கற்பூர)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னைக்கு உபசாரம் செய்வதுண்டோ

அருள்செய்ய இந்நேரம் ஆவதுண்டோ

கண்ணுக்கு இமையின்றிக் காவலுண்டோ

கன்றுக்குப் பசுவன்றிச் சொந்தமுண்டோ

முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ

முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ

எண்ணெய்க்கும் விளக்குக்கும் பேதமுண்டோ

என்றைக்கும் நானுந்தன் பிள்ளையன்றோ

(கற்பூர)

அன்புக்கே நானடிமை ஆகவேண்டும்

அறிவுக்கே என்காது கேட்கவேண்டும்

வம்புக்கே போகாமல் இருக்கவேண்டும்

வஞ்சத்தை என்நெஞ்சம் அறுக்கவேண்டும்

பண்புக்கே உயிர்வாழ ஆசைவேண்டும்

பரிவுக்கே நான்என்றும் பணியவேண்டும்

என்பக்கம் இவையெல்லாம் இருக்கவேண்டும்

என்னோடு நீஎன்றும் வாழவேண்டும்

(கற்பூர)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கும்பிடவோ கையிரண்டும் போதவில்லை

கூப்பிடவோ நாவொன்றால் முடியவில்லை

நம்பிடவோ மெய்யதனில் சக்தியில்லை

நடத்திடவோ காலிரண்டால் ஆகவில்லை

செம்பவள வாயழகி உன்னெழிலோ

சின்னஇரு கண்களுக்குள் அடங்கவில்லை

அம்பளவு விழியாளே உன்னைஎன்றும்

அடிபணியும் ஆசைக்கோர் அளவில்லை (கற்பூர)

காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்

கருவாகி உயிராகி உடலாகினாய்

நேற்றாகி இன்றாகி நாளாகினாய்

நிலமாகி பயிராகி உணவாகினாய்

தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்

தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்

போற்றாத நாளில்லை தாயேஉன்னை

பொருளோடு புகழோடு வைப்பாய் என்னை

(கற்பூர)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவில் கொள்ள வேண்டியவை

மிக மிக நல்லநாள் - இன்று

மிகவும் வேண்டாதது - வெறுப்பு

மிகப் பெரிய தேவை - சமயயோசித புத்தி

மிகப்பெரிய வெகுமதி - மன்னிப்பு

மிகவும் சுலபமானது - குற்றம்காணல்

## வாழ்க்கை சிந்தனைகள்

1. மேன்மையான நோக்கம் கடமையுணர்வு பாசம் ஆகியவை இல்லாத வாழ்க்கை மதிப்புக்குரியதாக இருக்காது.
2. நாமாக தேடிக்கிடைக்கும் மரியாதையை விட தானாக கிடைக்கும் மரியாதைக்கே மதிப்பு அதிகம்.
3. செருப்பில்லையே என ஏங்குவதைவிட கால்கள் இருப்பதை எண்ணி பெருமை கொள்.

## வாழ்க்கை சிந்தனைகள்

பொன்னை உரசிப் பார்த்து அறியலாம்

மனிதனை விவகாரம் நடத்தும் முறையிலிருந்து அறியலாம்.

எருமையை அது சுமக்கும்.

எருமையை அறியலாம் பெண்களை அறிய

எந்த முறையும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவளி

சிற்றம்பலம் + சின்னத்தங்கம்

- * சிவபாக்கியம் + * பாலசுப்பிரமணியம்
- அன்னலட்சுமி + * கனகராசா
- கந்தசாமி + * வள்ளியம்மை
- * **பரமசாமி**
- இராசமணி + சண்முகசுந்தரம்
- செல்வராசா + கமலாதேவி

இராசசிங்கம் + சிவகாமிப்பிள்ளை

- * திலகவதி + * பரமசாமி
- * கனகராசா + * அன்னலட்சுமி
- குணரட்ணம் + இராசமணி
- புவனேஸ்வரி + ஏகாம்பரம் (டென்மார்க்)
- * விக்னேஸ்வரன்
- விமலாதேவி + * செல்வராசா (ஜேர்மன்)
- * கடம்பேஸ்வரி

* அமரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்



நேர்மையாய் உழைத்து நேர்மையாய்
வாழ கூர்மையாய் புத்தி சொல்லி தந்தீர்
இப்போ நம்மை பரிதவிக்க விட்டு
எட்டாத் தூரம் சென்றீர்

இயற்கை எய்திய நம்
குடும்பத் தலைவனுக்கு ஆராச் செய்தி கேட்டு
நேரிலும், தொலைபேசியிலும் எமக்கு ஆறுதல்
அளித்தவர்களுக்கும்,
அந்தியேட்டிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும்
எங்கள் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்
நன்றி

இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகின்றாய்?
எதை நீ கொண்டுவந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகின்றது.
மற்றொருநாள் அது
வேறொருவருடையதாகின்றது.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்




பகவான் பிறிண்டேர்ஸ், சித்தன்கேணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org